<u>அரக்கோணம் நகராட்சி</u>
<u>அவசர மன்ற கூட்ட அறிவிப்பு</u>

கூட்ட எண்.36 நாள் 13.11.2018.

பொருள் : அவசர மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 14.11.2018 புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

அரக்கோணம் நகராட்சி 14.11.2018 புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள அவசர மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்(பொ)
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

மாவட்ட ஆட்சித்தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வேலூர் அவர்களின் செயல்றை கடித எண்.அ8/857/2018 நாள்.23.10.2018ன்படி நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2018–2019 ஆம் ஆண்டிற்கு கீழ் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கோ.அரி அவர்கள் பரிந்துரை செய்த கீழ்குறிப்பிட்ட இரண்டு பணிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்பதை நகர மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அரக்கோணம் நகரம் அரக்கோணம் – காஞ்சிபுரம் செல்லும் சாலை விண்டர்பேட்டை பஸ் நிலையத்தில் பேருந்து நிழற்குடை அமைத்தல். | 7.00 |
| 1. | அரக்கோணம் நகரம், ABM சர்ச் 5–வது தெருவில் 12.5 மீ 6 செட்300 வாட் உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல். | 7.75 |

**அலுவலக குறிப்பு: 1) மன்றம் பதிவு செய்யலாம்.**

**2) திட்டப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு ஆணையாளர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.1241/2017/இ1**

**பொருள் எண் :02**

தலைமைப்பெரியாளர், நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.29322/2017/பாசாதி–2 நாள்.10.05.2018ல் பாதாள சாக்கடை திட்டத்திற்கான வடிகால் திட்ட உப விதிகள்/பொது விதியில் தெரிவிக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்ட அமைப்புடன் இணைப்புகள் வழங்குவதற்கான திருத்திய உயர்வு செய்த கீழ்க்கண்ட விவரப்படி பராமரிப்பு கட்டணம் மற்றும் வைப்புத்தொகைகளுக்கு முதன்மை அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

<u>திருத்தி அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை திட்ட இணைபுகளுக்கான கட்டண விவரம் குடியிருப்பு பகுதி</u>

| வ. எண் | இண விவரம் | வைப்புத் தொகை | சேவை கட்டணம் (ஒவ்வொரு திங்கள்) |
|---|---|---|---|
| 1. | 500 சதுர அடி வரை | ரூ.5,000/- | ரூ.75/- |
| 2. | 501 முதல் – 1200 சதுர அடி வரை | ரூ.6,000/- | ரூ.85/- |
| 3. | 1201 முதல் – 2400 சதுர அடி வரை | ரூ.7,000/- | ரூ.95/- |
| 4. | 2401 முதல் – அதற்கு மேல் | ரூ.8,000/- | ரூ.105/- |
| 5. | சிறப்பு கட்டிடங்கள் | ரூ.25,000/- | ரூ. 300/- |

<u>வணிக வளாகம்</u>

| வ. எண் | இண விவரம் | வைப்புத் தொகை | சேவை கட்டணம் (ஒவ்வொரு திங்கள்) |
|---|---|---|---|
| 1. | 500 சதுர அடிக்கு குறைவன | ரூ.10,000/– | ரூ..150/– |
| 2. | 501 முதல் – 1200 சதுர அடி | ரூ.18,000/– | ரூ..200/– |
| 3. | 1201 முதல் – 2400 சதுர அடி | ரூ.21,000/– | ரூ..250/– |
| 4. | 2401 சதுர அடிக்கு மேல் | ரூ.40,000/– | ரூ..300/– |
| 5. | சிறப்பு கட்டிடங்கள் | ரூ.80,000/– | ரூ..600/– |

மேற்படி , திருத்தி அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்ட இணைப்புகளுக்கான வைப்புத்தொகை (ம) சேவைக்கட்டணம் தொடர்பாக பொது மக்களிடமிருந்து ஆலோசணை (ம) ஆட்சேபணை ஏதேனும் இருப்பின் தெரிவித்திடும் பொருட்டு பொதுமக்கள் அறியும் வண்ணம் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. (தினத்தந்தி நாளிதழ் நாள்.02.06.2018) இந்நிலையில் பொதுமக்களிடமிருந்து இதுகுறித்து ஆலோசணைகளோ (ம) ஆட்சேபணைகளோ ஏதும் வரப்பெறவில்லை. மற்றும் பாதாள சாக்கடை திட்டத்திற்கான உப விதிகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மாவட்ட அரசிதழ் எண்.7 செப்டம்பர் 5/2018 அன்று பிரசுரம் செய்யப்பட்டுள்ளது எனவே பாதாள சாக்கடை திட்டத்திற்கானஉப விதிகள்/பொது விதியினை இறுதி அங்கீகாரம் பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–05 அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.2535/2006/இ1)**

**பொருள் எண் :03**

இந்நகராட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–2019 16.10.2018 ம் தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | அரக்கோணம் நகரம், 36வது வார்டுக்கு உட்பட்ட கற்பகம் நியாய விலைக்கடை எண்.9–க்கு புதிய கட்டிடம் கட்டுதல் | 8.00 | எஸ்.கஸ்தூரி | 0.355% | ஜி.ரவி | 1.08% |
| 2. | அரக்கோணம் நகராட்சி, கணேஷ் நகர் 1–வது தெருவில் புதிய ஆழ்துளை கிணறு, மின்மோட்டார் மற்றும் சிண்டெக்ஸ் அமைத்தல் | 1.50 | எஸ்.கஸ்தூரி | 0.033% | ஜி.ரவி | 1.92% |

அலுவலக குறிப்பு : வரிசை எண். 1 முதல் 2 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1888/இ1/2018

**பொருள் எண் :04**

அரக்கோணம் நகராட்சியில் தூய்மை பாரத இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை – 2018–19 ஆம் ஆண்டிற்கு கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் 25.09.2018 அன்று கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூராய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி பெற்றதை தொடர்ந்து 09.11.2018 அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டதில் பின்வருமாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| | பொது நிதி | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | **Procurement of primary collection Vehicles – Purchase of Battery operated Vehicle as per specification – 30 Nos** | **54.00** | M/S.பிரியம் இன்டஸ்டிரிஸ் & இன்ஜினயரிங் | 0.06% | -- | -- |
| | | | M/S. அருண் இந்தியன் மோட்டார்ஸ் | 0.28% | | |

**அலுவலக குறிப்பு : மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை குறைவாக உள்ளதால் அதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S. அருண் இந்தியன் மோட்டார்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் 887/இ1/2016**

**பொருள் எண் :05**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2018–19 ஆம் ஆண்டின் கீழ் அரக்கோணம் நகராட்சியில் கீழ்காணும் சாலைப்பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி 09.10.02018 அன்று கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூராய்வு சய்யப்ப்ட்டதில் வரப்பெற்ற அனைத்து ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி பெற்றதை தொடர்ந்து 09.11.2018 அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| சிப்பம் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| 1 | 2 | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | **Providing Cement Concrete pavement road at Chaiman Panchatcharam Street,Tiruppur Kumaran Street, Rathinam Street and Anna Street in Ward - 01, Rajendra Giri Singh Street, Lal Bahadur Sastri Street in Ward - 03, Nehruji Nagar Main** | **200.00** | ---- | | M/S. டெக்னிக் இன்பராஸ்டக்சர் | 19.75% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **Road, Nehruji Nagar 4th Street in Ward - 05, Madurai Pillai Street in Ward - 11, Rajaji Street in Ward - 16, Sundaram Street, Sathyamoorthy Street in Ward - 18, Pillayar koil Streer, Dharmarayan Street in Ward - 19 and Pandit Jawaharlal Nehru 1st and 2nd streets in Ward - 23.** | | | N. சோமசுந்தரம் | 22.48% |
| 2. | **Providing Cement Concrete pavement road at Galiwari Kandigai Main Road Ward - 08, Panneer Selvam Street, Changam Street in Ward - 09, M C Raja Street, Anthoniyar Koil Street, Lazar Street, Nannumiyan Street, Thulukkanathamman koil street in Ward - 10, Jublee Road in Ward - 12, NVN 1st Street in Ward - 26, Krishnampet 3rd and 5th Streets in Ward - 27, V P Koil Street in Ward - 30, A N Kandigai 1st, 2nd, 3rd and 4th Streets in Ward - 31, Sathyavani Muthu Nagar 2nd Street in Ward - 33, Haji Ibrahim Kuty Street, Muthappan Street, Upparapalayam Othavadai street in Ward - 34** | **200.00** | ----- | M/S. டெக்னிக் இன்பராஸ்டக்சர் | 19.75% |
| | | | | N. சோமசுந்தரம் | 22.48% |
| 3. | **Providing BT Surface Road at Anna Street Extension ward - 01, Ganesh Nagar 10th, 11th and 13th Streets ward - 02, Nehruji Nagar 1st street, Nehruji Nagar 7th Street, Bharathi Street, Nehruji Nagar 4th Street 1st Cross in Ward - 05.** | **100.00** | ----- | M. கார்த்திக் | 4.93% |
| | | | | P. சந்திரன் | 5.21% |

மேற்படி சிப்பம் – I , சிப்பம் – II மற்றும் சிப்பம் – III க்கான வரப்பெற்ற இரு விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் அதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளவர்கள் விவரம்.

1. சிப்பம் –I M/S. டெக்னிக் இன்பராஸ்டக்சர் – 19.75%
2. சிப்பம் –II M/S. டெக்னிக் இன்பராஸ்டக்சர் – 19.75%
3. சிப்பம் –II திரு.M. கார்த்திக் – 4.93%

மேற்படி சிப்பம் –I சிப்பம் – II ஒப்பந்ததாரர் M/S. டெக்னிக் இன்பராஸ்டக்சர் மற்றும் சிப்பம் – III ஒப்பந்ததாரர் திரு.M. கார்த்திக் அவர்களுக்கும் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தை குறைத்து வழங்குமாறு கடந்த 09.11.2018 அன்று Negotiation கடிதம் அனுப்பப்பட்டு கேட்டுக்கொண்டதன் பேரில் ஒப்பந்ததாரர் M/S. டெக்னிக் இன்பராஸ்டக்சர் மற்றும் திரு.M.

கார்த்திக் அவர்களின் 17.08.2018ம் தேதிய கடிதத்தில் கீழ்க்கண்ட விலை விகிதத்தில் பணிகளை செய்ய ஒப்புதல் அளித்துள்ளார்.

| பணி | ஒப்பந்ததாரர் | மதிப்பட்டை விட அதிகம், | குறைத்து தர ஒப்புதல் அளித்தது | தற்சமயம் உள்ள விலை விகிதம் மதிப்பட்டை விட அதிகம் |
|---|---|---|---|---|
| சிப்பம்–1 | M/S. டெக்னிக் இன்பராஸ்டக்சர் | 19.75% | (–) 14.80% | 4.95% |
| சிப்பம்–2 | M/S. டெக்னிக் இன்பராஸ்டக்சர் | 19.75% | (–) 14.80% | 4.95% |
| சிப்பம் –3 | திரு.M. கார்த்திக் | 4.93% | –– | 4.93% |

மேற்படி மூன்று சிப்பங்களுக்கும் வரப்பெற்ற ஒப்பந்ததாரரின் ஒத்திசைவு கடிதத்தின் படி சிப்பம்–1 M/S. டெக்னிக் இன்பராஸ்டக்சர் 4.95% மதிப்பட்டை விட அதிகம், சிப்பம்–2 M/S.டெக்னிக் இன்பராஸ்டக்சர் 4.95% மதிப்பட்டை விட அதிகம் மற்றும் சிப்பம் –3 திரு.M. கார்த்திக் 4.93% மதிப்பட்டை விட அதிகம் என ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை குறைத்து கொடுத்துள்ளனர் எனவே, மூன்று சிப்பங்களுக்கும் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளை ஏற்று, திட்டப் பணிகள் என்பதால் காலதாமதத்தையும், சாலை பணிக்கு தேவையான மூலப்பொருள்களின் விலை உயர்வினையும் கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்**

**ந.க.எண்.2535/2006/இ1**

**பொருள் எண் :06**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் Froza Enterprises Pvt,Ltd., Chennai நிறுவனத்தின் மூலம் 6 ஓட்டுநர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர், அவர்களின் தினக்கூலி அடிப்படையில் 01.04.2017 முதல் பணி செய்து வருகின்றனர். தற்போது Froza Enterprises Pvt,Ltd., Chennai நிறுவனத்தின் பணி உத்திரவு 31.12.2018 தேதியுடன் முடிவடைவதால் 01.01.2019 தேதி முதல் 31.03.2020 தேதி வரை 15 மாதங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், கீழ்காணும் விவரப்படி ஓட்டுனர்கள் பற்றாக்குறைகளை போக்கவும் கூடுதலாக ஓட்டுனர்களை பணி அமர்த்தி கொள்ளவும் தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| S NO | VEHICLE NUMBER | VEHICLE DETAILS | DRIVER NAME | VEHICLE MAKE, MODEL & PURCHASE YEARS |
|---|---|---|---|---|
| 1 | TN23AR7435 | FRONT END LOADER (JCB) | G.HARI KRISHNAN | TATA TELCO CONSTRUCTION COMPANY LTD (TATA OPEN) 02.12.2008 |
| 2 | TN73W2316 | TIPPER LORRY | D.VENKATESAN | ASHOK LEYLAND LTD (OPEN) 07.09.2012 |
| 3 | TN23AS6307 | TIPPER LORRY | E.MANI KANDAN | ASHOK LEYLAND LTD (MMV (GV-OPEN) 27.08.2007 |
| 4 | TN23AS6296 | DUMPER PLACER LORRY | D.BABU (Out sourcing) | ASHOK LEYLAND LTD (MMV (GV-OPEN) 27.08.2007 |
| 5 | TN73V5358 | DUMPER PLACER LORRY | Subramani (Out sourcing) | VE COMMERCIAL VEHICLE LTD (CABIN & CHASSIS) 20.12.2013 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | TN73W2299 | DUMPER PLACER LORRY | ACTING DRIVER | ASHOK LEYLAND LTD (OPEN) 07.09.2012 |
| 7 | TN23X 6607 | TIPPER LORRY | Vacant | TELCO CONSTRUCTION COMPANY LTD JD315V BACHOE LOADER 12.02.1997 |
| 8 | TN73R 2325 | TATA ACE MINI TIPPER VAN | RAGAVAN (Out sourcing) | TATA MTORS LTD TATA ACE FACELIFT HT BS IV 13.10.2017 |
| 9 | TN73R 2340 | TATA ACE MINI TIPPER VAN | NARASIMMAN (Out sourcing) | TATA MOTORS LTD TATA ACE FACELIFT HT BS IV 13.10.2017 |
| 10 | TN73R 2353 | TATA ACE MINI TIPPER VAN | E.PONVARAN (Out sourcing) | TATA MOTORS LTD TATA ACE FACELIFT HT BS IV 13.10.2017 |
| 11 | TN73R 2355 | TATA ACE MINI TIPPER VAN | T.BRITE CHRISTIYAN (Out sourcing) | TATA MOTORS LTD TATA ACE FACELIFT HT BS IV 13.10.2017 |
| 12 | TN73V9270 | DOG TRAVALLING VEHICLE | ACTING DRIVER | TATA MOTORS LIGHT GOODS VEHICLE 1/2014 |

மேற்காணும் விவரப்படி 12 வாகனத்தை இயக்கிட 12 ஓட்டுநர்கள் தேவைப்படுகிறது. இருப்பினும் நாய்கள் பயணவாகனம் தினசரி பயன்பாடு இல்லை என்பதால் அதனை தவிர மீதமுள்ள 11 வாகனத்திற்கு 3 நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு நிரந்தர ஓட்டுனர் தவிர 8 ஓட்டுனர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர், அவர்களின் தினக்கூலி அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தினால் மேற்கொள்ளப்படும் செலவினம் கீழ்காணும் விவரப்படி சமர்பிக்கப்படுகிறது.

**<u>ஒரு ஓட்டுனருக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட கூலி ரூ.395/— என்ற அடிப்படையில் ஓராண்டுக்கான செலவின விவரம்.</u>**

| | |
|---|---|
| வேலூர் மாவட்ட ஆட்சியர் ஓட்டுனர் நாள் ஒன்றுக்கு ரூ.395 x 8 | ரூ.3,160/— |
| 8 ஓட்டுனருக்கு 1 மாதத்திற்குரிய தினக்கூலி (3160 x 30) | ரூ94,800/— |
| **EPF 13.61%** | ரூ.12,902/— |
| **ESI 4.75 %** | ரூ.4,503/— |
| **GST 18 %** | ரூ.17,064/— |
| மொத்தம் | ரூ.1,29,269/— |
| 8 ஓட்டுனருக்கு 15 மாதத்திற்கான செலவினம் ரூ.1,29,269 x 15 | ரூ.19,39,035/— |

எனவே 01.01.2019 முதல் 31.03.2020 வரையிலான 15 மாத காலத்திற்கான செலவுத்தொகை ரூ.20.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டியும், மேலும் இப்பொருள் தொடர்பாக நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான செலவினத்தொகைக்கும், ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: 8 ஓட்டுனர்களை மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர், அவர்களின் தினக்கூலி அடிப்படையில் பணியில் ஈடுபடுதவும்,01.01.2019 முதல் 31.03.2020 வரையிலான 15 மாத காலத்திற்கான செலவுத்தொகை ரூ.20.50 லட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இப்பொருள் தொடர்பாக நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும்,**

**அதற்கான செலவினத்தொகைக்கும், ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண் :07**

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing) 14 தற்காலிக பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை திரு.G.ரவி, ஒப்பந்ததாரர் அவர்களின் மூலம் 01.09.2018 தேதி முதல் 31.12.2018 வரை ஏற்கனவே வழங்கி வரும் அதே தொகையில் பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான செலவின தொகை ரூ.5.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி பெறப்பட்டு தற்போது பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிலையில் 31.12.2018 தேதியுடன் மேற்காணும் பணி உத்திரவு முடிவடைவதால் 01.01.2019 தேதி முதல் 31.03.2020 தேதி வரை 15 மாதங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான தோராய செலவின தொகை கீழ்காணும் விவரப்படி கணக்கிடப்பட்டுள்ளது.

**ஒரு பணியாளர் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட கூலி ரூ.325/— என்ற அடிப்படையில் ஓராண்டுக்கான செலவின விவரம்.**

| | |
|---|---|
| வேலூர் மாவட்ட ஆட்சியர் துப்புரவு பணியாளர் நாள் ஒன்றுக்கு ரூ.325 x 14 | ரூ.4,550/— |
| 14 பணியாளருக்கு 1 மாதத்திற்குரிய தினக்கூலி (4550 x 30) | ரூ1,36,500/— |
| **EPF 13.61%** | ரூ.18,578/— |
| **ESI 4.75 %** | ரூ.6484/— |
| **கிருமி நாசினி 5 %** | ரூ.6825/— |
| **GST 18 %** | ரூ.24570/— |
| மொத்தம் | ரூ.1,92,957/— |
| 14 பணியாளருக்கு 15 மாதத்திற்கான செலவினம் ரூ.1,92,957 x 15 | **ரூ.28,94,355/—** |

எனவே 01.01.2019 முதல் 31.03.2020 வரையிலான 15 மாத காலத்திற்கான செலவுத்தொகை ரூ.30.00 லட்சத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இப்பொருள் தொடர்பாக நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான செலவினத்தொகைக்கும், ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: 14 பணியாளர்களின் மூலம் நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு 01.01.2019 முதல் 31.03.2020 வரையிலான 15 மாத காலத்திற்கான செலவுத்தொகை ரூ.30.00 லட்சத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இப்பொருள் தொடர்பாக நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான செலவினத்தொகைக்கும், ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண் :08**

அரக்கோணம் நகராட்சி பகுதியில் கார்பரேட் நிறுவனங்களின் சமூக கூட்டாண்மை பொறுப்பு நிதி (CSR Fund) பெற்று குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து பராமரிப்பு பணி மேற்கொள்ள விருப்பம் உள்ள நிறுவனங்களிடமிருந்து 09.11.2018-ல் விருப்ப கருத்துரு பெறப்பட்ட நிலையில் கிழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விருப்ப கருத்துரு வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | விவரம் | M/s.Dharana Infrastructure Projects Private Limited |
|---|---|---|
| 1 | இட வசதி | 4.50 X 4.50 மீ |
| 2 | குடிநீர் இணைப்பு | ஆழ்துளை கிணறு |
| 3 | மின்சார இணைப்பு | மும்முனை |

| | | |
|---|---|---|
| 4 | முன் அனுபவம் | உள்ளது |
| 5 | நிதி ஆதாரம் | கார்பிரேட் நிறுவனம் மற்றும் தொண்டு நிறுவனங்களின் மூலம் நிதி பெற்று நிலையம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. |
| 6 | பொது மக்களுக்கு குடிநீர் 20லிட்டர் கேன் ஒன்றுக்கான விலை | கேன் ஒன்றுக்கு ரூ.7.00/- |
| 7 | நகராட்சிக்கு செலுத்தும் வளர்ச்சி நிதி | கேன் ஒன்றுக்கு ரூ.1/- |

மேற்கண்ட **M/s.Dharana Infrastructure Projects Private Limited** என்ற நிறுவனத்திற்கு போதிய முன் அனுபவம் சான்று இணைக்கப்பட்டுள்ளது மேலும், மேற்கண்ட நிறுவனம் 36 இடங்களில் தனியார் குடிநீர் தானியங்கி மையங்கள் அமைக்க கருத்துரு சமர்ப்பித்துள்ளதால் அதன் அடிப்படையில் கீழ்கண்டுள்ள இடங்களான வார்டு எண்.1- சேர்மன் பஞ்சாச்சரம் தெரு, வார்டு எண்.2-கணேஷ் நகர் மெயின் ரோடு குடிநீர் தேக்க தொட்டி அருகில், வார்டு எண்.3 - சாஸ்திரி நகர், வார்டு எண்.4 - டி.என்.எச்.பி. மெயின் ரோடு, வார்டு எண்.5 - நேருஜி நகர் 5–வது தெரு இரண்டாம் குறுக்கு சந்து தெரு, வார்டு எண்.6-நேருஜி நகர் 3வது தெரு நகராட்சிப் பள்ளி அருகில், வார்டு எண்.7-போலாட்சியம்மன் கோவில் தெரு நகராட்சிப் பள்ளி அருகில், வார்டு எண்.8-மோசூர் ரோடு சர்ச் அருகில், வார்டு எண்.9-மோசூர் ரோடு, வார்டு எண்.10 - மோசூர் ரோடு காந்தி ரோடு சந்திப்பு அருகில், வார்டு எண்.11-ராஜாபாதார் தெரு, வார்டு எண்.12 - மணியாகர் தெரு உப்புக்குளம் அருகில், வார்டு எண்.13-மாரூதி தெரு, வார்டு எண்.14-பழைய பேருந்து நிலையம் அம்மா உணவகம் அருகில், வார்டு எண்.15-முருகப்பன் தெரு டவுன் ஹால் முதல் தெரு அருகில், வார்டு எண்.16-தார்மராயன் கோவில் திடல், வார்டு எண்.17 தர்மராஜ கோயில் திடல், வார்டு எண்.18 முருகப்பன் தெரு வேதாச்சலம் பூங்கா அருகில், வார்டு எண்.19 தர்மராயன் தெரு பேருந்து நிலையம் அருகில், வார்டு எண்.20 கற்பக விநாயகர் கோயில் தெரு, வார்டு எண்.22 சோமசுந்தரம் கோயில் தெரு, வார்டு எண்.23 சோளிங்கர் ரோடு மாநில பாரத வங்கி அருகில், வார்டு எண்.24 ஏ.பி.எம் சர்ச் நகராட்சி பள்ளி வார்டு எண்.25 டி.பி.ரோடு பேருந்து நிலையம் அருகில், வார்டு எண்.26 அம்மன் கோயில் தெரு, வார்டு எண்.27 ஒச்சேரி ரோடு கிருஷ்ணாம்பேட்டை 5–வது தெரு, வார்டு எண்.28 புதுப்பேட்டை இறட்சி கூடம் அருகில், வார்டு எண்.29 போல் தெரு, வார்டு எண்.30 வி.பி.கோயில் தெரு, வார்டு எண்.31 எ.ஏன் கண்டிகை, வார்டு எண்.32 மல்லிகணேசபுரம், வார்டு எண்.33 சத்தியவாணி முத்து 1–வது தெரு ICDS மையம் அருகில், வார்டு எண்.34 ஒத்தவாடை உப்பரபாளையம், வார்டு எண்.35 முனுசாமி தெரு கோயில் அருகில், வார்டு எண்.36 பஜனை கோயில் தெரு கோயில் அருகில் ஆகிய பகுதிகளில் பணியினை மேற்கொள்ள M/s.Dharana Infrastucture Projects Private Limited நிறுவனம் வழங்கியுள்ள விருப்ப (EOI) கருத்துருக்கு கீழ்கண்ட நிபந்தனைகளின்படி பணியினை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

1. கார்ப்ரேட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட CSR நிதியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து கொள்ள வேண்டும். மேலும் அதன் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி அந்நிறுவனமே மேற்கொள்ள வேண்டும்.
2. மாதாந்திர மின்சார கட்டணம் அந்நிறுவனமே செலுத்தப்பட வேண்டும்.
3. குடிநீர் தரத்தை உறுதி செய்து மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும்.
4. இத்திடத்தின் மூலம் பயன்பெரும் பயனாளிகளுக்கு E-Cards அந்நிறுவனமே வழங்கி பராமரிக்க வேண்டும்.
5. 20 லிட்டர் Can ரூ.7.00 என விநியோகிக்கும் போது கேன் ஒன்றுக்கு ரூ,1.00 நகராட்சிக்கு

கட்டணமாக செலுத்த வேண்டும்.

6. திட்டம் செயல்படுத்திய 10 ஆண்டுகளுக்கு பின்பு குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நல்ல முறையில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.
7. நிறுவனம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஒதுக்கீடு செய்த இடத்திற்கு எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது.
8. திட்டம் செயல்படுத்தும் போது பொது மக்களிடமிருந்து புகார்கள் பெறப்பட்டால் தங்களுக்கு வழங்கப்பட உத்திரவை இரத்து செய்ய அரக்கோணம் நகராட்சி ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.
9. பொது மக்களுக்கு மட்டுமே இத்திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டும். தொழிற்சாலைகள் மற்றும் உணவு விடுதிகளுக்காக குடிநீர் விநியோகம் செய்ய கூடாது.

எனவே மேற்கண்ட நிபந்தனைகளின்படி M/s.Dharana Infrastructure Projects Private Limited `என்ற நிறுவனம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் இந்நகராட்சின் மேற்கண்ட 36 பகுதிகளில் அமைத்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u> மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண். 2111/2018/இ1)**

**பொருள் எண் 09**

மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், வேலூர்–12 அவர்களின் கடித ந.க.எண்.2059/2017/பி1 நாள்.31.08.18ல் கடிதத்தின்படி அரக்கோணம் நகராட்சியில் ஆற்றல் மற்றும் மின்சேமிப்பு தணிக்கை தொடர்பாக தெருமின்விளக்குகளின் மின் பயனீட்டு அளவை தணிக்கை செய்ய (Investment Grade Auditing of Street Lighting System) திட்ட அறிக்கை தயார் செய்ய M/s Active Energy OPC Private Limited, Chennai அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு நகராட்சியில் உள்ள தெருமின் விளக்குகளை தணிக்கை செய்தததற்கு கீழ்குறிப்பிட்ட தொகை செலுத்தக்கோரப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| S.No | Name of the Municipality | No of Street Lights as per RFP | Contribution per Light | ULB Contribution for 40% (in Rupees) |
|---|---|---|---|---|
| 1 | Arakkonam | 2438 | 57.1387 | 139304.00 |

**அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.**

**2) மேற்படித்தொகை ரூ.139304/–ஐ மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர்–12 அவர்களின் பெயரில் செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.2542/2018/இ1**

**பொருள் எண் 10**

நகராட்சி கணக்குகளை வலைதளம் முலம்  இணக்கம் செய்து தணிக்கைக்கு சமர்ப்பித்திடும் வகையில் தயார் செய்து வழங்கிட குறுகிய கால விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறன்றது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி |
|---|---|---|
| 1. | கோல்டன் ஜெராக்ஸ்<br>187, காந்தி ரோடு<br>அரக்கோணம் | 99,000/– |
| 2. | தனம் ஜெராக்ஸ் மற்றும் கம்யூட்டர்ஸ்<br>185 காந்தி ரோடு அரக்கோணம். | 95,000/– |
| 3. | P.ஜெயசிம்மன்<br>17, பாப்பன் குளம்<br>ஜோதி நகர்<br>அரக்கோணம். | 90,000/– |

அலுவலக குறிப்பு: **குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. P.ஜெயசிம்மன் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கலாம். ஆணையரின் முன் அனுமதி பெற்று வேலை  உத்திரவு  வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**